

முதலமைச்சர் அவர்கள் காணொளி காட்சிவாயிலாக சென்னையிலிருந்து டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்களின் நினைவு முன்னிட்டு முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம், கல்வி, சுயதொழில் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்ததை தொடர்ந்து தஞ்சாவூர் மாவட்டம் அண்ணா நூற்றாண்டு அரங்கில் உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர்.கோவி.செழியன், அரசு நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார்கள். மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம், தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை சந்திரசேகரன் எம்.எல்.ஏ., ச.முரசொலி எம்.பி, சட்டமன்ற உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம், கா.அண்ணாதுரை, என். அசோக்குமார், மாநகராட்சி மேயர்கள் சண்.இராமநாதன், க.சரவணன். மாவட்ட காவல் கண்ணாணிப்பாளர் இரா.இராஜாராம், துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி, உதவி ஆட்சியர் பயிற்சி கார்த்திக்ராஜா மற்றும் பலர் உடன் உள்ளனர்.



கழகத் தலைவர் , முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் படி, கழக இளம் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு, அரியலூர் மாவட்ட கழகத்தின் நீண்டநாள் கனவான 'கலைஞர் அறிவாலயம்' அடிக்கல் நாட்டு விழா எழுச்சியுடன் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில் கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் மண்டல பொறுப்பாளர் கே.என். நேரு பங்கேற்று, புதிய கட்டடப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டிச் சிறப்பித்தார். கழகத்தின் வளர்ச்சிக்கான இந்த வரலாற்று நிகழ்வில்,மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தொண்டர்கள் பெருந்திரளாகக் கலந்துகொண்டனர்.

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில்!

# அரியலூரில் கலைஞர் அறிவாலயம் - அமைச்சர் கே.என்.நேரு அடிக்கல் நாட்டினார்!

## கழகத்தினர் 25,000க்கும் மேற்பட்டோர் பங்கேற்பு!

அரியலூர், டிச. 10 –

அரியலூர் மாவட்ட திமுக சார்பில் கலைஞர் அறிவாலயம் அடிக்கல் நாட்டு விழா மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில் நடைபெற்றது.

கழக முதன்மைச் செயலாளர்,மண்டல பொறுப்பாளர், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அடிக்கல் நாட்டி, கல்வெட்டையும் திறந்து வைத்து, பணியை துவக்கி வைத்தார்.

தற்பொழுது புதியதாக புறப்பட்ட ஒருவரை ஒரு சில ஊடகங்கள், ஒரு சில பத்திரிகைகள் வீட்டை விட்டே வெளியே வராதவர்களுக்கு நடந்தார், நிற்கிறார், போகிறார், வருகிறார் என விளம்பரப்படுத்துகின்றனர்.

கழக முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு கூடியிருந்த தொண்டர்கள் மத்தியில் உரையாற்றியபோது,

ஒவ்வொரு இடத்திலும் திமுகவுக்கு அலுவலகம் இருக்க வேண்டும் என நம் எல்லோர் மனதிலும் நீங்கா இடம்பெற்ற முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னதை நிறைவேற்றி வருகிறோம். 1996, 2001, 2006, 2011 இல் அப்போதைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சி செய்ததை போன்று தற்பொழுது நம் திராவிட மாடல் முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சி செய்துகொண்டு இருக்கிறார். அரியலூர் பெரம்பலூர் திருச்சி உள்ளிட்ட மாவட்டங்களுக்கு பல்வேறு சிறப்பு திட்டங்களை வழங்கிகொண்டு இருக்கிறார். உங்கள் மாவட்ட செயலாளர் , தமிழ்நாடு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அரியலூர் மாவட்ட அனைத்து தரப்பு மக்களையும் சந்தித்து நம் திராவிட மாடல் அரசின் சாதனைகளை ஒவ்வொரு ஊராக, கிளை கழகங்கள் தோறும் சென்று மக்களை சந்தித்து சொல்ல வேண்டும் என்பதற்காக அனைத்து ஒன்றிய செயலாளர்களுக்கும் ஜீப் வழங்கி இருக்கிறார் அவரை நான் வாழ்த்துகிறேன் என்றார், சட்டப்பேரவையில் எந்தவித சமரசத்துக்கும் இடம் கொடுக்காமலும், எந்த உறுப்பினர் என்ன கேள்வி கேட்டாலும் அதற்கு சரியான பதிலை சொல்லக் கூடியவர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கண்ணசைவை பார்த்து அதனபடி திறம் பட செயல்பட கூடியவர் தான் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர். நம் முதல்வர் அருகில் பல மூத்த அமைச்சர்கள் இருக்கின்ற போதிலும் பல துறை சார்ந்த அமைப்பு ரீதியாகவும், ஒரு சில சமூகம் சார்ந்த பிரச்சினைகள் வரும் பொழுது அது சம்மந்தமாக கழகத் தலைவர் எஸ்.எஸ்.சிவசங்கரை தான் பேசச் சொல்வார்.

வீட்டை விட்டே வெளியே வராதவர்களுக்கு எல்லாம் பத்திரிக்கையாளர்கள் நடந்தார், நிற்கிறார், போகிறார், வருகிறார் என விளம்பரப்படுத்துகின்றனர். தமிழ்நாட்டு மக்களுக்கு இத்தனை திட்டங்களை தந்து கொண்டிருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை விட ஒரு நல்லாட்சியை அவர் தருவார் என்றா நம்புகின்றீர்கள்? நிச்சயம்

இதை யாரும் நம்ப மாட்டார்கள். 2026 ல் கழகம் தான் வெற்றி பெறும் அப்படி வெற்றி பெறுவதற்கு முதல் கூட்டமாக அரியலூர், பெரம்பலூர் மாவட்ட தொண்டர்கள் வந்திருப்பது ஒரு முன்னுதாரணம் ஆகும்.

நடைபெறுகின்ற நம் திராவிட மாடல் ஆட்சியில் பல திட்டங்களை செய்து தர இருக்கின்றது . ஒன்றிய அரசு நமது எந்த திட்டத்தையும் செயல்படுத்துவதற்கு எந்த நிதி ஒதுக்க மாட்டார்கள், நமக்கு தர வேண்டிய நிதியையும் தரவும் மாட்டார்கள் ஆனால் திட்டத்தை செயல்படுத்த விடாமல் தடுப்பதற்காக பல வழிகளில் நமக்கு இடைஞ்சல் செய்கிறார்கள். ஆனாலும் நம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எந்த திட்டத்தை யும் நிறுத்தாமல் தொடர்ந்து செயல்படுத்தி கொண்டு இருக்கிறார்.

வரும் 2026 சட்மன்ற தேர்தலில் அரியலூர் பெரம்பலூர் உள்ளடக்கிய 4 தொகுதிகளையும் வெற்றி பெற்றிபெற்று நம் முதலமைச்சரின் கரத்தை வலுப்படுத்துவோம் என தொண்டர்களிடம் அமைச்சர் கே. என்.நேரு உரையாற்றினார்.

அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசியதாவது:

கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் படி, கழக இளம் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் மரியாதைக்குரிய உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு,

அரியலூர் மாவட்ட கழகத்தின் நீண்டநாள் கனவான 'கலைஞர் அறிவாலயம்' அடிக்கல் நாட்டு விழா மிகுந்த எழுச்சியுடன் நடைபெற்றது.

கழகத்தின் வளர்ச்சிக்கான இந்த வரலாற்று நிகழ்வில், மாநில,மாவட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தொண்டர்கள் பெருந்திரளாகக் கலந்துகொண்டதற்கு முதலில் அனைவருக்கும் நன்றியை கூறிக்கொள்கிறேன் என்றார்.

தொடர்ந்து அமைச்சர் பேசிய போது

ஒருநபர் அமர்ந்துகொண்டு சொல்லும் செய்தியை சட்டப்பூர்வமாக்கி தமிழ்நாட்டையே பிளவு படுத்தும் காட்சியெல்லாம் இன்று அரங்கேறுகிறது நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதனை மறைமுகமாக சாடினார்.

இந்திய அரசியலில் பாசிச ஆட்சி நடக்கின்ற சூழலில் அவர்களை எதிர்கொள்ள, அவர்களை எதிர்த்து நிற்கக் கூடிய ஒரே தலைவராக நமது தலைவர் , தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் திகழ்ந்து கொண்டிருக்கிறார்.

இந்தியாவிற்கே வழிகாட்டும் கொள்கை தலைவராக திகழ்கிறார்.

நம்முடைய முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

நமது தலைவர் செயல்படுத்துகின்ற நலத்திட்டங்களை மற்ற மாநிலங்களில் பின்பற்றுகின்றனர்.

தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னையில் பல்வேறு இடங்களில் நேரடியாக சென்று ஆய்வு செய்து மழைநீர் எங்கும் தேங்காமல் துரிதமாக செயல்பட்டு பணியை அரசு அதிகாரிகளுடன் நிறைவேற்றி வருகிறார்.

மாணவ, மாணவியர்களின் இடையே உள்ள விளையாட்டு வீரர்களை கண்டறிந்து அவர்களுக்கு நல்ல பயிற்சி கொடுத்து ஊக்குவித்து பல விளையாட்டு போட்டிகளில் இன்று தமிழ்நாடு பல பதக்கங்களை வென்று வருகிறது. நம் தமிழ்நாடு முதலமைச்சர் மாணவ, மாணவியர்கள், மாற்றுத்திறனாளிகள்,

திருநங்கைகள், பொதுமக்கள் என எதிர்கால முன்னேற்றத்திற்காக பல புதிய திட்டங்களை வழங்கி கோண்டு இருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட முதலமைச்சர் மீண்டும் ஆட்சி பொறுப்பிற்கு வந்தால் தான் தமிழகத்தை காப்பாற்ற முடியும்,

மத அரசியல், வெறுப்பு அரசியல் நடத்துபவர்களை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு தமிழகம் என்றைக்கும் ஓரணியாக நிற்கின்றது என்பதை காட்ட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மீண்டும் வெற்றி பெற்று அரியணை ஏற அயராது உழைத்திட வேண்டும் என பேசினார்.

நடைபெற்ற கலைஞர் அறிவாலயம் அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சியில் அரியலூர் பெரம்பலூர் மாவட்ட ஒன்றிய,நகர, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், பொது மக்கள் பலரும் சாரை சாரையாக அணிவகுத்து விழா நடைபெறும் இடத்திற்கு சுமார் 25,000 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வருகை தந்தனர்.

இந்நிகழ்ச்சியில் பெரம்பலூர் மாவட்ட பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் எம்.பி.பாலசுப்ரமணியன், வழக்கறிஞர் இராஜேந்திரன், மாநில ஆதிதிராவிடர் அணி துணை அமைப்பாளர் ப.துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணை அமைப்பாளர் பரமேஷ்குமார்,

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் து.அமரமூர்த்தி, ஒன்றிய கழக பொறுப்பாளர்,தனசேகர், பேரூர் கழக செயலாளர் ப.கோபாலகிருஷ்ணன், நகர கழக செயலாளர்கள் வெ.கொ.கருணாநிதி, இரா.முருகேசன், ஒன்றிய கழக பொறுப்பாளர் இரா.கென்னடி, மாவட்ட துணை செயலாளர்கள் மு.கணேசன், லதா பாலு, சி.சந்திரசேகரன், மாவட்ட பொருளாளர் கு.இராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் சி.ஆர். எம்.பொய்யாமொழி, ஆர்.எம்.அன்பழகன், இரா.பாலு, ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் பூ.செல்வராஜ், இரா.மணிமாறன், மா.அன்பழகன், ரெ.அசோகசக்ரவர்த்தி, ரெங்க.முருகன், கோ.அறிவழகன், ஆர்.கலியபெருமாள், வி.எழில்மாறன், இரா. அண்ணாதுரை, ப.தனவேல், தெய்வ.இளையராஜா, நா.கணேசன், பொன்.செல்வம்

,கே.ஜி.எஸ். முருகன், ஆர்.செந்தில்குமார், பெரம்பலூர் ஒன்றிய பொறுப்பாளர்கள் மதியழகன், சி.இராஜேந்திரன், நீலமேகம், பேரூர் செயலாளர் அல்போன்ஸ், பொதுக்குழு உறுப்பினர்கள் வி.எம்.ஷாஜகான்,

சுமதி கருணாநிதி, அரியலூர் நகர் மன்ற தலைவர் சாந்தி கலைவாணன், உடையார்பாளையம் பேரூராட்சி தலைவர் மலர்விழி ரஞ்சித்குமார், வரதராஜன்பேட்டை பேரூராட்சி தலைவர் மார்க்கிரேட் அல்போன்ஸ் ஆகியோர் முன்னிலையில் அடிக்கல் நாட்டுவிழா நடைபெறுகிறது அதுசமயம் மாநில,மாவட்ட, தலைமை செயற்குழு, பொதுக்குழு, ஒன்றிய,நகர, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக தோழர்கள், பொதுமக்கள் சுமார் 25,000 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



பெரம்பலூர் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் இளையராஜாவின் தந்தை அமல்ராஜ் அவர்களின் மறைவிற்கு, கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., அவரது சொந்த ஊரான தெரணி கிராமத்தில் அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த உடலுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர்.எம்.பிரபாகரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## காலநிலை மாற்றத்திற்கான நடவடிக்கைகள்:

# ஒன்றிய அரசு விழிப்புணர்வுடன் எடுத்த முன்னெடுப்புகள் என்ன?

## நாடாளுமன்றத்தில் ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி!

**புதுடெல்லி, டிச. 10 – காலநிலை மாற்றத்திற்கான நடவடிக்கைகள் பட்டியலில் பின்னுக்கு தள்ளப்பட்ட ஒன்றியம் விழிப்புணர்வாக உள்ளதா, என்ன முன்னெடுப்புகள் எடுக்கப்படப் போகின்றன என்று எம்.பி. கே.இ.பிரகாஷ் கேள்வி எழுப்பியுள்ளார்.**

*பழைய திட்டங்களையே மீண்டும் பட்டியலிட்டு ஒன்றிய அரசு அக்கறையற்ற பதில் எனக் குற்றச்சாட்டியுள்ளார்.*

*2025 ஆம் ஆண்டுக்கான Climate Change Performance Index (CCPI)யில் இந்தியா 13 இடங்கள் சரிந்து 23வது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ள மோசமான நிலை குறித்து. ஒன்றிய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்திடம் நாடாளுமன்றத்தில் ஈரோடு கே.இ. பிரகாஷ் கேள்வி எழுப்பினார்.*

*பல ஆண்டுகளுக்கு முந்தைய பழைய திட்டங்களையே மீண்டும் பட்டியலிட்டு, அமைச்சகம் பதிலளித்துள்ளது. இது ஏமாற்றம் அளிக்கிறது என்பதோடு, இந்திய மக்களின் எதிர்காலத்தின் மீது ஒன்றிய அரசு எவ்வளவு அக்கறையின்மையோடு இருக்கிறது என்பதையும் காட்டுகிறது.*

*தரவுகளுக்கு மதிப்பு கொடுக்காத ஆணவப் போக்கு:*

*உருவாக்க சரியான தரவுகளுடன் கூடிய எனது கேள்விக்கு இந்தியா எந்த வொரு வெளிநாட்டு தரவரிசையையும் உள்நாட்டு கொள்கையை அங்கீகரிக்காது" என்று ஒன்றிய அரசு பதிலளித்துள்ளது.*

*காலநிலை மாற்றம் என்பது சர்வதேசப் பிரச்சனை இதில் சர்வதேச அளவிலான சுற்றுச்சூழல் அமைப்புகளின் கருத்துகளுக்கும் தரவுகளுக்கும் மதிப்பு இருக்கின்றன Germanwatch வெளியிட்ட தரவரிசையில் தகவல் பிழையிருந்தால்,*

*அதையே ஒன்றிய அரசு சுட்டிக்காட்ட வேண்டும். ஆனால், அதை 'வெளிநாட்டு தரவரிசை என ஒரே வார்த்தையில் மதிப்பைக் குறைத்து கீழே தள்ளுவது, தனது பிழைகளை மறைக்க ஒன்றிய அரசு நடத்தும் நாடகமென்றே எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.*

*சரி, அப்படியென்றால் இந்தியா காலநிலை மாற்றத்திற்கான நடவடிக்கைகளின் அளவுகோலில் எப்படி மற்ற நாடுகளை விட சிறப்பாக செயல்படுகிறது என ஒன்றிய அரசு தரவுகளை பதிலில் சொல்லியிருக்க வேண்டும் ஆனால் அப்படி எந்த தரவையும் ஒன்றிய அரசு குறிப்பிடவில்லை. வெறுமனே "நாங்கள் பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்" என்று சில நடவடிக்கைகளை மட்டும் குறிப்பிட்டிருக்கிறது.*



*எண்கள் எங்கே? எந்த அளவு நாம் மற்ற நாடுகளை விட முன்னேறியிருக்கிறோம்?*

*பழைய திட்டங்களையே மீண்டும் பட்டியலிட்ட ஒன்றிய அரசு:*

*காலநிலை மாற்றத்திற்கான நடவடிக்கைகளில் இந்தியா சரிவை சந்தித்து வரும் நிலையில், புதிய திட்டங்கள் அல்லது இடைக்கால இலக்குகளை (Interim milestones) அறிவித்து செயல்பட வேண்டியது முக்கியம். இது குறித்த எனது கேள்விக்கு, தேசிய பசுமை ஹைட்ரஜன் இயக்கம் (National Green Hydrogen Mission) தேசிய சூரிய இயக்கம் (National Solar Mission), LIFE முயற்சிகள் போன்ற பழைய திட்டங்களையே ஒன்றிய அரசு மீண்டும் பட்டியலிட்டுள்ளது. இந்தப் பதில் அலட்சியமானது என்பதுடன் இத்தனை திட்டங்கள் நடைமுறையில் இருந்தும் ஏன் காலநிலை மாற்றத்தில் பின்தங்கினோம் என்ற கேள்வியை எழுப்புகிறது.*

*காலநிலை மாற்றம் ஒரு சர்வதேசப் பிரச்சனை என்ற நிலையில், அதில் இந்தியாவின் செயல்பாடு நமது பெருமையையும் புவி அரசியல் ஆதிக்கத்தையும் தீர்மானிக்கக்கூடியது தற்போது வரை, ஒன்றிய அரசின் செயல்பாட்டுப் பிழைகளால் நாம் பின் தள்ளப்பட்டிருக்கிறோம்.*

*இனியேனும் சூழலை உணர்ந்து காலநிலை மாற்றத்திற்கு எதிராக பழைய திட்டங்களை மேம்படுத்துவது. புதிய திட்டங்களை அறிவிப்பது, இடைக்கால இலக்குகள், நீண்டகால இலக்குகளை சரியாக தீர்மானித்து செயல்படுவது ஆகியவற்றை ஒன்றிய அரசு செய்ய வேண்டும்.*

*இவ்வாறு கே.இ. பிரகாஷ் எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.*



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை, கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகம் அரங்கில் நடைபெற்ற விழாவில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம், கல்வி, சுயத்தொழில் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கியதை தொடர்ந்து நாகை மாவட்டம் ஒரத்தூர் அரசு மருத்துவ கல்லூரி கலையரங்கத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்களை நாகை மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழக தலைவருமான என்.கௌதமன், நாகை மாவட்ட ஆட்சித்தலைவர்.ப.ஆகாஷ், கீழ்வேளுர் சட்டமன்ற உறுப்பினர் நாகைமாலி ஆகியோர் வழங்கினார்கள்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்த நாளை முன்னிட்டு திருப்பூர் தெற்கு மாவட்டம், குடிமங்கலம் வடக்கு ஒன்றிய தி.மு.க., ஒன்றிய இளைஞர் அணி மற்றும் மாவட்ட விவசாய அணி சார்பில் தூய்மை பணியாளர்களுக்கு வடக்கு ஒன்றிய கழக செயலாளர் அணிக்கடவு ச.கிரி ஏற்பாட்டில் அரிசி, புத்தாடை மற்றும் காலை உணவினை மாவட்ட கழகப் பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி வழங்கினார். இதில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மு.ஜெயக்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சி.சியாம் பிரசாத், ஒன்றிய அவைத்தலைவர் நா.அற்புதராஜ், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ந.மணிக்குமார், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் ரகுபதி, ஒன்றிய துணை செயலாளர்கள் வெங்கடேஷ், சிவராஜ், பொருளாளர் ஆறுச்சாமி, மாவட்ட பிரதிநிதிகள் சுப்பிரமணியம், உதயகுமார் உள்பட மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் எம்.பி., ஆலோசனைப்படி கழக இளைஞர் அணி செயலாளர் , தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு ஆத்தூரில் தெற்கு நகர திமுக செயலாளர் ஏ.ஜி.ராமச்சந்திரன் தலைமையில் கேக் வெட்டி கொண்டாப்பட்டது . இதில் வடக்கு நகர செயலாளர் கே.பாலசுப்பிரமணியம் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கோவை மாநகர் மாவட்ட தி.மு.க., ஒண்டிப்புதூர் பகுதி கழகம் மற்றும் பகுதி இளைஞர் அணி சார்பில் பகுதி கழக பொறுப்பாளர் கஸ்தூரி அருண் தலைமையில் பகுதி இளைஞரணி அமைப்பாளர் அன்பு பன்னீர்செல்வம் முன்னிலையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற அணிக்கு சுழற்கோப்பையை மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தனபால், மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், தளபதி இளங்கோ ஆகியோர் வழங்கினர். இதில் ஆடிட்டர் சசிகுமார், சாந்தாமணி பன்னீர்செல்வம், மணிகண்டன், லாரா பிரேம் தேவ், பைந்தமிழன், சதீஷ்குமார், சின்னச்சாமி, ரமேஷ்குமார், பட்டாசு பாலு, நகர் மணி, பிரேம்குமார், சிவராமன், ராஜசேகரன், ராஜேந்திரன், சுரேஷ்குமார், சச்சிதானந்தம், பிரேம்குமார், ராஜ்குமார், நவீன்குமார், அருள் பூவிந்தன், தினேஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.